சி. தட்சிணாமூர்த்தி—

# உணர்வுடன் உறவாடும் சிற்பங்கள்

—இந்திரன்



இத்தாலிய மாமேதை மைக்கெல் ஆஞ்சலோவின் கருத்துப்படி, சிற்பம் என்பது ஒரு மரத்திலிருந்தோ, பாறையிலிருந்தோ வெட்டி எடுக்கப்பட்ட ஒன்றுதான். பொருள்களின் சேர்க்கையினால் அமைக்கப்படுகிற சிற்பம் என்பது ஓவியத்தின் கூறுகளை அதிகம் கொண்டிருக்கிறது என்று வாதாடினார் அவர்.

சென்னை ஓவியக்கல்லூரியின் பேராசிரியரும், அகில இந்திய புகழ்பெற்ற சிற்பியுமான சி. தட்சிணாமூர்த்தி இந்த இருவகைகளிலும் செயல்படுகிற ஒருவர். சுட்டமண் சிற்பங்களைச் செய்கிறபோது அவர் ஒன்றைக் கட்டுவது மாதிரி வடிவங்களைப் படைக்கிறார். பளிங்குக்கல், மாக்கல் போன்றவற்றில் தனது சிற்பங்களைச் செதுக்கி எடுக்கிற போது, அந்தப் பாறைகளுக்குள் ஒளிந்து இருக்கும் உருவத்தை அவர் கண்டெடுக்கிறார் என்று சொல்லலாம்.

48 வயது நிரம்பிய, குடியாத்தம் ஊரில் பிறந்த இவர், ஒரு பாறையைப் பார்த்தவுடன் அதற்குள் இருக்கும் சிற்பத்தை உணர்ந்துகொள்கிறார். கல்லுக்குள் இருக்கும் அந்தச் சிற்பத்தைத் தவிர அதிகமாக அந்தப் பாறையில் ஒட்டியிருக்கும் வீணான துகள்களை அகற்றி அந்தச் சிற்பத்தை வெளிக்கொண்டு வருவதில் அவரது உளிகள் செயல்படத்தொடங்கி விடுகின்றன.

சென்னையிலுள்ள லலிதகலா அகாடமிக்குச் சென்றால் தட்சிணாமூர்த்தி எப்போதுமே களிமண் சிற்பங்களோடோ அல்லது பாறைகளோடோ சதா உழைத்துக் கொண்டிருப்பதைக் காணலாம். இவர் 1970ல் தனது ஓவியப்படிப்பை சென்னை ஓவியக்கல்லூரியில் முடித்த கால கட்டத்தில்தான் இந்தியா முழுவதும் சிற்பக்கலை ஒரு புதிய எழுச்சியைப் பெற்றிருந்தது. சிற்பக் கலையில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளின் பாரம்பரியம் கொண்ட இந்தியாவில் அப்போதுதான் முழுச்சுதந்திரம் கொண்ட 'புதுச்சிற்பம்' என்ற கருத்தோட்டம் கிளர்ந்து எழுந்து இருந்தது. இந்தக் காலகட்டத்தில் ஊற்றெடுத்த தட்சிணாமூர்த்தியின் உற்சாகம் இன்று வரையிலும் குன்றவில்லை.



தட்சிணாமூர்த்தி தனது சிற்பங்களுக்கு உருவ மாதிரிகள் எதையும் பயன்படுத்துவது இல்லை. தனது சிற்பங்களை ஒரு மதத்தின், ஒரு தத்துவத்தின், ஒரு நம்பிக்கையின் செய்தியைச் சொல்வதற்காகப் பயன்படுத்துவது இல்லை. சிற்பக் கலை ரீதியான மதிப்பீடுகளினால் மட்டுமே ஒரு படைப்பை மதிப்பிடுவது நல்லது என்று எண்ணிச் செயல்படுகிறவர் இவர். 19-ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் சென்னை, கல்கத்தா, பம்பாய், லாகூர் ஆகிய இடங்களில் பிரிட்டீஷ்காரர்களால் அமைக்கப்பட்ட ஓவியப்பள்ளிகள் கற்றுக்கொடுத்த 'மெய்மை' (Realism) யிலிருந்து முற்றிலும் மாறுபட்டது இவரது மெய்மை. மரபு ரீதியாக இந்த மண்ணில் தொடர்ந்து வளர்ந்து வரும் இவரது 'மெய்மை' உருவங்களின் உள்ளிருக்கும் சாராம்சம் சம்பந்தப்பட்டது.

இவரது சிற்பங்களில் காணக் கிடைக்கும் 'மெய்மை', உள்ளதை உள்ளவாறு எந்த வித வித்தியாசங்களுமின்றி புகைப்படம் போன்று பிரதி எடுப்பது அன்று; மாறாக இந்தியாவில் காலங் காலமாக இருந்து வரும் சிற்பங்களில் காணக் கிடைக்கும் உடற்கூறியலைப் புறந்தள்ளி, உளவியலை முன்னிறுத்தி படைக்கப்பட்டவை இவரது சிற்பங்கள். இதில் தலை இந்த அளவு இருந்தால் உடலும் பிற அங்கங்களும் இந்த அளவுக்குத்தான் இருக்க வேண்டும் எனும் நியதிகளை நிராகரித்து உள்ளிருக்கும் கலை ஆளுமையின் சுதந்திரமான நடைபழகலில் உருவாகிறவைதான் இவரது சிற்பங்கள். நவீன கலை தன்னிச்சையான சுதந்திர போக்கைத்தான் அடிநாதமாகக் கொண்டிருக்கிறது. மாபெரும் உன்னதங்கள் என்று நம்மால் கருதப்படும் அஜந்தா ஓவியங்களையும், மகாபலிபுரச் சிற்பங்களையும் கூட மதம் பின்னின்று கட்டுப்படுத்தி இருக்கிறது. ஆனால் இவரது சிற்பங்கள் இந்த மாதிரியான புறக்காரணங்களினால் கட்டுப்படுத்தப்படுவதில்லை.

இவரது சுட்ட களிமண் சிற்பங்களை எடுத்துக்கொண்டோமானால் அவற்றில் நாகரிகப் படுத்தப்படாத ஒரு மூலசக்தியைக் காணலாம். 'நாகரிகப் படுத்தப்படாத' எனும் பதப் பிரயோகம் கலை சம்பந்தமாக பயன்படுத்தப்படுவது தவறானதுதான். ஏனெனில் காட்டுமிராண்டி மனிதர்கள் தங்களது அறிவியல் அறிவில் பின்தங்கி இருந்தார்களே தவிர கலை உணர்வில் அவர்கள் இன்றைய நவீன கலைஞர்களுக்கு ஈடுகொடுத்து நிற்கிறார்கள். குகை ஓவியங்களின் சித்திரங்கள் இன்றைய நவீன கலைஞர்கள் தேடும் உருவங்களின் எளிமைப்படுத்தப்பட்ட சாரத்தையே முதுகெலும்பாகக் கொண்டு நிற்கின்றன.

அண்மையில் பம்பாய் ஜஹாங்கீர் கலை அரங்கில் ஓவியர் ஆதிமூலத்துடன் இணைந்து இவர் நடத்தப் போகும் கண்காட்சி ஒன்றுக்காக படைத்திருந்த சிற்பங்களை என்னிடம் காண்பித்தார். இவை பெரும்பாலும் மாக்கல், பளிங்குக்கல் ஆகியவற்றில் செதுக்கப்பட்டவையாக இருந்தன. கல்லில் இவர், செதுக்கியிருந்த 'தலை' எனும் சிற்பங்கள் அவற்றிற்கே உரித்தான வடிவமும், சமநிலையும், கனபரிமாணங்களும் கொண்டிருந்தன. சில முகங்களில் அகலமான கன்னங்களில் இலைகளும், பூவுமாக ஒருசிறு பூவேலைப்பாடு கூட இருந்தது. இந்த பூவேலைப்பாடு சிற்பத்தின் வடிவங்கள் சமநிலையற்றுப் போகிறபோது அவற்றிற்குள் ஒரு ஒழுங்கமைதியைக் கொண்டு வருவதற்காகச் செய்யப்பட்டிருந்தன. ராஜஸ்தானத்து ரமேஷ் பட்டேரியாவைப் (Ramesh Pataria) போன்று கல்லுக்குள் இயற்கையாக அமைந்திருக்கும் கோடுகள், வரிகள், சொரசொரப்பான

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)